# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : | C.C.164/2023 | Date: 25.11.2024 |
| Deposition of Witness for | : | **அ.சா.3** | |
| Name | : | **அஜீத்** | |

**(சாட்சி மனுவின்மீது திரும்ப அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)**

(எதிரி ஆஜர், எதிரியின் வழக்கறிஞர் ஆஜர்)

**குறுக்கு விசாரணை :–**

1) இந்த நீதிமன்றத்தில் என் மீது வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். சங்ககிரி காவல் நிலையத்தில் Friends of Police ஆக இருந்தேன் என்றால் சரிதான். சம்பவத்தின்போது அங்கு எவ்வளவு பேர் இருந்தார்கள் என்றால் சுமார் 10 பேர் இருந்தார்கள். கூட்டம் கூடியதால் அங்கு போலீசார் உடனடியாக வந்துவிட்டார்கள் என்றால் சரிதான். போலீசார் கூட்டத்தை கலைத்துவிட்டு காயம்பட்ட நபரை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள் என்றால் சரிதான்.

2) போலீசார் வந்தவுடன் அடிபட்ட பெண்மணி, அவருடைய கணவர் மற்றும் அருகில் இருந்த நபர்களை விசாரித்தார்கள் என்றால் ஆமாம். போலீசார் என்னை ஒருமுறைதான் விசாரித்தார்கள் என்றால் சரிதான். என்னிடம் போலீசார் கையொப்பம் பெற்றுக்கொண்டனர் என்றால் சரிதான். அப்போது காயம்பட்ட பெண்மணி மற்றும் அவரது கணவர் இருந்தார்களா

என்றால் இல்லை.

3) பெட்ரோல் பங்கிலிருந்து எவ்வளவு தூரத்தில் மேற்படி பெண்மணி கீழே விழுந்து கிடந்தார் என்றால் சுமார் 30 முதல் 40 மீட்டர் தூரத்தில் சேலம் செல்லும் திசையில் விழுந்துகிடந்தார். அவருடைய கணவரும் கீழே விழுந்துகிடந்தார் என்றால் சரிதான். சாலையில் எந்த இடத்தில் TVS 50 வாகனம் விழுந்துகிடந்தது என்றால் இரண்டு சக்கர வாகனம் செல்லும் வெள்ளைக்கோடு அருகில் விழுந்துகிடந்தது.

4) நான் சொல்லும் தேதியில் சொன்ன இடத்தில் நான் அங்கு இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. வலதுபுற கதவை திறந்ததாக சொல்வதும் காரின் கதவு இருசக்கர வாகனத்தின் ஹேண்டில் பாரில் மோதியதால் அந்தப்பெண்மணி கீழே விழுந்துவிட்டார் என்று கூறுவது வழக்கிற்காக அவ்வாறு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

5) சம்பவ சமயத்தில் சம்பவ இடத்தில் லாரி ஒன்று கடந்து சென்றது என்றால் அதுபற்றி ஞாபகமில்லை. கார் கதவை திறந்த நபரை போலீசார் உடனடியாக காவல் நிலையத்திற்கு அழைத்துச்செல்லப்பட்டார் என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய் என்றால் சரியல்ல. போலீசார் நீதிமன்றத்திற்கு வெளியே எதிரியை எனக்கு அடையாளம் காண்பித்ததால்தான் முதல் விசாரணையில் எதிரியை நான் அடையாளம் காண்பித்துள்ளேன் என்றால்

சரியல்ல. எதிரி சம்பவ இடத்தில் காருடன் இருந்தார் என்றும் எதிரி காரின் கதவை திறந்தார் என்று கூறுவதும் பொய் என்றால் சரியல்ல.

6) இருசக்கர வாகனத்தை ஓட்டிச்சென்ற சுப்ரமணி என்பவர்தான் கவனக்குறைவாகவும் அஜாக்கிரதையாகவும் வாகனத்தை ஓட்டிச்சென்று தன்னை கடந்து சென்ற லாரியின் அதிர்வால் நிலைதடுமாறி அவரே கீழே விழுந்துவிட்டார் என்றால் சரியல்ல. எதிரிக்கும் மேற்படி காருக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. போலீசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

/ Sd /(S.R.Babu)
Judicial Magistrate No.I
Sankari